அகத்தியர் துணை
அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

# ஞானத்திருவடி

ஓங்காரக்குடில் ஆசான் அருளிய சன்மார்க்க உண்மைப் பத்திரிகை
சார்வரி ✪ ஆனி (ஜுன் – 2020) விலை: ரூ.10/–

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்
தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்**

உள்ளடக்கம்

1. சித்தர்கள் போற்றித் தொகுப்பின் சிறப்பு ........ 5
2. சித்தர்கள் போற்றித் தொகுப்பு ........ 6
3. மகான் இராமதேவர் அருளிய ஆசி நூல் ........ 11
4. 17.02.1988 அன்று அருளிய **குருநாதரின் அருளுரை திருக்குறள் - வாழ்க்கைத் துணை நலம்** ........ 16
5. வைகாசி மாத பௌர்ணமி விழா ........ 34
6. ஆனி மாத பௌர்ணமி விழா ........ 34
7. ஓங்காரக்குடில் வெளியீடுகள் ........ 35
8. ஓங்காரக்குடில் நித்திய செயல்பாடுகள் ........ 45

சிறிதும் கருணையில்லாது உயிர்க்கொலை செய்து உண்ணுகின்ற மக்கள் நட்பு நமக்கு தேவையில்லை!

ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளை,
ஓங்காரக்குடில், துறையூர்.

அருளாக வரும் வழிமுறைகள்தனை
அறம்தனை உலக மக்கள் ஏற்று
அருளமுது உண்டு இனிதே
அரங்கஞானி குடில் தொடர்பை
தொடர்பை கூட்டி தொடர்ந்து வர
தொல்லை தரும் கருமவினைகள்
இடரான ருண ரோகம் அல்லல்
எதிரியிடை வஞ்சம் சகலதும் விலகி
விலகியே மகிழ்வும் அமைதியும்
விலைமதிப்பில்லா அறிவும் ஞானமும்
பழக்க வழக்கங்களில் தருமமும்
பலரும் மெச்சும் வாழ்க்கை ஏற்றமும்

– மகான் இராமதேவர் ஆசிநூல்

அன்பார்ந்த வாசகர்களுக்கு வணக்கம்,

**ஞானத்திருவடி நூலே ஞானிகள் திருவடியாகும்.**

ஞானத்திருவடி என்னும் நூல் முற்றுப்பெற்ற மகான்களைப் பற்றி பேசுவதாகும். இந்நூலை வாங்குதல், படித்தல், மற்றவர்களுக்கு வாங்கிக் கொடுத்தல் ஆகிய அனைத்துமே ஜென்மத்தைக் கடைத்தேற்ற உதவும். எனவே இந்நூல் ஞானவாழ்வு விரும்புகிறவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும். இந்நூல் வீட்டில் இருந்தால் நவகோடி சித்தர்களும், சித்தர்களுக்கெல்லாம் தலைவராகிய அகத்தீசரும், அவருக்கு ஆசானாகிய சுப்பிரமணியரும் நமது வீட்டில் இருந்து அருள் செய்வதாக எண்ணவேண்டும்.

மேலும் ஓங்காரக்குடில் ஆசான் 44 ஆண்டு காலம் ஓங்காரக்குடிலில் கடுந்தவம் இருந்து வருகிறார்கள். உலக மக்களை கடவுளின் பிள்ளைகளாக பார்த்து, அவர்களுக்கு வரும் துன்பங்களிலிருந்தும், துயரங்களிலிருந்தும் விடுவித்து ஞானியர்களின் திருவடிதான் உண்மை ஆன்மீகம் என்று சொல்லி அவ்வழியில் நம்மை அழைத்துச் செல்லும் ஓங்காரக்குடில் ஆசான் முருகப்பெருமானின் கல்கி அவதாரம் **தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள், ஞானிகளின் பாடல்களில், தான் உணர்ந்த பல இரகசியங்களை நம்பால் கருணைகொண்டு எளிய முறையில் அருளிய அருளுரைகள் அடங்கியதுதான் **ஞானத்திருவடி** நூல்.

விரைவில் எதிர்பாருங்கள் அற்புதமான “**ஞானயுகம்**” அமைகின்றதை!

அன்புடன்
இரா.மாதவன்.

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**பாவபரிகாரமும் சாபவிமோசனமும் பெற்றுத்தரவல்ல அற்புத பாராயண நூல்**

**சித்தர்கள் போற்றித் தொகுப்பு**

ஞானிகள் அத்துணைபேரும் முருகப்பெருமானால் வாசி நடத்திக் கொடுக்கப்பட்டு மும்மலக் குற்றத்தை வேருடன் அறுத்து வெற்றி கண்டவர்கள். அவர்களுக்கு இறப்பும் பிறப்பும் இல்லை. நரை, திரை, மூப்பு இல்லை. சித்தர்கள் அனைவரும் மரணமில்லாப் பெருவாழ்வை பெற்றவர்கள். ஆக்கல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் எனும் ஐந்தொழில் செய்யும் வல்லமையை பெற்றவர்கள். இவர்களின் திருவடிகளை பூஜித்தாலே நாம் செய்த பாவங்களெல்லாம் நீங்கிவிடும். பாவங்களுக்கு காரணமான உயிர்க்கொலை செய்தல், புலால் உண்ணுதல், மது அருந்துதல், சூதாடுதல், வரவுக்கு மீறிய செலவு செய்தல் இன்னும்பல தீவினை செயல்களெல்லாம் கீழ்க்கண்ட சித்தர்கள் போற்றித் தொகுப்பை படித்தால் நீங்கிவிடும். பெருமைக்குரிய சித்தர்கள் போற்றித் தொகுப்பை ஒரு தீபம் ஏற்றி வைத்து பயபக்தியுடன் பணிந்து வணங்கி பாராயணம் செய்தால் இல்லறமும் சிறக்கும், வீடுபேறாகிய ஞானமும் கைகூடும்.

கல்வி கற்கும் மாணவர்கள் தினசரி பாராயணம் செய்தால், கல்வியில் சிறந்த தேர்ச்சியை பெறுவதோடு நல்ல வேலை வாய்ப்பும் அமையப் பெறுவார்கள்.

ஜென்மத்தைக் கடைத்தேற்ற விரும்புகின்ற ஆன்மீகவாதிகளுக்கு இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பானது, ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ள கிடைத்த ஒரு அற்புதமான பாராயண நூலாகும்.

எதை விரும்பி சித்தர்கள் போற்றித் தொகுப்பை பாராயணம் செய்கிறீர்களோ அதை அப்படியே பெற்றுத் தரவல்ல அற்புதமான பாராயண நூல் சித்தர்கள் போற்றித் தொகுப்பாகும். சித்தர்கள் சாதி, மதம், இனம், மொழி, தேசம் கடந்து மனிதகுலத்திற்கு பொதுவானவர்கள். ஆதலினால் சித்தர்கள் போற்றித் தொகுப்பை எல்லா சமயத்தினரும், எல்லா நாட்டினரும், பேதாபேதமின்றி பாராயணம் செய்யலாம். ஆண், பெண், சிறார், பெரியோர், குடும்பஸ்தன், துறவி, பஞ்சபராரிகள், ஏழை எளியோர் என யாவரும் பாராயணம் செய்யலாம். கணவனை இழந்தவர்களும் தடையின்றி விளக்கேற்றி பாராயணம் செய்யலாம். எந்த கட்டுப்பாடும் இல்லை, எந்த சடங்குகளும் இல்லை.

அற்புதம் வாய்ந்த இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பை பல கோடி பேர் பாராயணம் செய்து எண்ணற்ற பலன்களை அடைந்ததோடு அவர்களது பிரச்சனைகள் தீர்ந்திடவும், வேண்டுகோள்கள் நிறைவேறி மனம் மகிழ்ந்ததும், இவ்வுலகம் கண்ட அற்புத உண்மையாகும். இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பை இன்னும் பலகோடி மக்கள் பாராயணம் செய்து மேன்மை அடைவார்கள் என்பது ஞானிகள் வாக்காகும்.

இதுவரையிலும் ஞானவாழ்வு அடைவதற்கு துணையாக இருந்ததும், இனி அடையப்போகின்றவர்களுக்கும் சித்தர்கள் போற்றித் தொகுப்பு துணையாகும் என்பது சத்திய வாக்காகும்.

## துவக்கப்பாடல்

திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே.

திருமந்திரம் : திருவடிப்பேறு : 1598

ஞானியர்களின் திருவடி பூஜைதான் உண்மை ஆன்மீகம் என்று
உலகறியச் செய்யும் வள்ளல்,
முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள்

**தொகுத்து வழங்கிய**

# சித்தர்கள் போற்றித் தொகுப்பு

| | | | |
|---|---|---|---|
| ஓம் | அகத்தியர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அகப்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அசுவினித்தேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அத்திரி மகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அநுமான் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அம்பிகானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அருணகிரிநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அருள்நந்திசிவாச்சாரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அல்லமாபிரபு | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அழுகண்ணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | 10 |
| ஓம் | இடைக்காடர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமலிங்கசுவாமிகள் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | உமாபதி சிவாச்சாரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஔவையார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கஞ்சமலைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கடைப்பிள்ளைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கடுவெளிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கண்ணானந்தர் | திருவடிகள் போற்றி | 20 |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | கண்ணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கணநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கணபதிதாசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கதம்பமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கபிலர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கமலமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கருவூர்தேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கல்லுளிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கலைக்கோட்டு முனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கவுபாலச்சித்தர் | திருவடிகள் போற்றி | 30 |
| ஓம் | கணராமர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | காகபுஜண்டர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | காசிபர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | காலாங்கிநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குகைநமச்சிவாயர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குதம்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குமரகுருபரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குருதட்சணாமூர்த்தி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குருராஜர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குறும்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | 40 |
| ஓம் | கூர்மானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கொங்கணேஸ்வரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கோரக்கர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கௌசிகர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கௌதமர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சங்கமுனிச் சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சங்கர மகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சங்கிலிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சச்சிதானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சட்டநாதர் | திருவடிகள் போற்றி | 50 |
| ஓம் | சண்டிகேசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சத்யானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சிவயோகமாமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சிவவாக்கியர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சிவானந்தர் | திருவடிகள் போற்றி | |

| | | |
|---|---|---|
| ஓம் | சுகப்பிரம்மர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | சுந்தரானந்தர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | சுந்தரமூர்த்தி | திருவடிகள் போற்றி |
| ஓம் | சூதமுனிவர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | சூரியானந்தர் | திருவடிகள் போற்றி 60 |
| ஓம் | சூலமுனிவர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | சேதுமுனிவர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | சொரூபானந்தர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | ஜம்பு மகரிஷி | திருவடிகள் போற்றி |
| ஓம் | ஜமதக்னி | திருவடிகள் போற்றி |
| ஓம் | ஜனகர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | ஜனந்தனர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | ஜனாதனர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | ஜனக்குமாரர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | ஜெகநாதர் | திருவடிகள் போற்றி 70 |
| ஓம் | ஜெயமுனிவர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | ஞானச்சித்தர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | டமாரானந்தர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | தன்வந்திரி | திருவடிகள் போற்றி |
| ஓம் | தாயுமான சுவாமிகள் | திருவடிகள் போற்றி |
| ஓம் | தானந்தர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | திரிகோணச்சித்தர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | திருஞானசம்பந்தர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | திருநாவுக்கரசர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | திருமாளிகைத் தேவர் | திருவடிகள் போற்றி 80 |
| ஓம் | திருமூலதேவர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | திருவள்ளுவர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | தூர்வாசமுனிவர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | தேரையர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | நந்தனார் | திருவடிகள் போற்றி |
| ஓம் | நந்தீஸ்வரர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | நாதாந்தச்சித்தர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | நாரதர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | நொண்டிச்சித்தர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | பட்டினத்தார் | திருவடிகள் போற்றி 90 |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | பத்ரகிரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பதஞ்சலியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பரத்துவாசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பரமானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பராசரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பாம்பாட்டிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிங்களமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிடிநாகீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிருகுமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிரும்மமுனிவர் | திருவடிகள் போற்றி | 100 |
| ஓம் | பீர்முகமது | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புண்ணாக்கீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புலத்தீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புலிப்பாணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பூனைக்கண்ணார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | போகமகாரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மச்சமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மஸ்தான் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மயூரேசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மாணிக்கவாசகர் | திருவடிகள் போற்றி | 110 |
| ஓம் | மார்க்கண்டேயர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மாலாங்கன் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மிருகண்டரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | முத்தானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மெய்கண்டதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மௌனச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யாகோபு | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யூகிமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யோகச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யோகானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ரோமரிஷி | திருவடிகள் போற்றி | 121 |
| ஓம் | வசிஷ்டமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வரதரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வரரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வராகிமிகி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வால்மீகி | திருவடிகள் போற்றி | |

| | | |
|---|---|---|
| ஓம் | விசுவாமித்திரர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | வியாக்ரமர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | வியாசமுனிவர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | விளையாட்டுச்சித்தர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | வேதாந்தச்சித்தர் | திருவடிகள் போற்றி 131 |

ஓம் எண்ணிலா கோடி சித்தரிஷி கணங்கள்

திருவடிகள் போற்றி போற்றி.

## நிறைவுப்பாடல்

வாழ்கவே வாழ்கஎன் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்கமெய்ஞ் ஞானத் தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே.

திருமந்திரம் 3047

மேற்கண்ட 131 சித்தர்கள், மகான்களின் திருவடிகளை தினசரி காலையும் மாலையும் போற்றி பூஜை செய்வதே சிறப்பறிவாகும். சிறப்பறிவு பெற்றவர்களுக்கு குடும்ப ஒற்றுமை, புத்திர பாக்கியம், உடல் ஆரோக்கியம் போன்ற நல்வினைகள் பெருகி, மது அருந்துதல், புலால் உண்ணுதல், சூதாடுதல் போன்ற தீவினைகள் நீங்கிவிடும். மேலும், மாதம் ஒருவருக்கோ அல்லது இருவருக்கோ பசித்த ஏழைகளுக்கு பசியாற்றியும் வந்தால், பாவம் புண்ணியம் பற்றி உணர்ந்து புண்ணியம் பெருகி ஞானியாவார்கள் என்பது சத்தியம்.

## ஓங்காரக்குடில் ஆசான் ஆசி!



ஓங்காரக்குடிலில் நடைபெறும் அன்னதானம் மற்றும் அறப்பணிகளுக்காக, தமிழகமெங்கும் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம் சார்பாக ஞானத்திருவடி நூலை பொதுமக்களுக்கு கொண்டு சேர்க்கும் அன்பர்களுக்கும், அவர்கள் குடும்பத்தாருக்கும் எல்லாம் வல்ல ஞானிகள் அருள் கிட்டி எல்லா நன்மைகளும் அடைவார்கள். மேலும் உடல் ஆரோக்கியமும், நீடிய ஆயுளும், எல்லா நலமும் வளமும் பெறுவார்கள். மேலும் ஞானமும் சித்திக்கும் என்று ஓங்காரக்குடில் ஆசான் ஆசி வழங்கியுள்ளார்கள்.



அன்பான வாசகர்களே வணக்கம்

**உங்கள் ஆண்டு சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா!**

ஞானத்திருவடி நூலை படித்து, உங்கள் உணர்வுகளை எங்களோடு பகிர்ந்துகொள்ள அன்போடு அழைக்கின்றோம்.

– அன்பன் இரா.மாதவன், 98424 55661.

# சார்வரி வருடம் ஆனி மாத ஞானத்திருவடி நூலிற்கு
# மகான் இராமதேவர் அருளிய ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன் M.A., B.Ed.,
திருச்சி. செல் : 99655 71837

1. பாரப்பா கலிவெல்ல பிறந்த ஞானி
   பாமரர்க்கும் அருளி காக்கும் யோகி
   கூறப்பா ஆறுமுக அரங்கா என
   குருபரனே இறங்கி அருளுவான் என்பேன்

2. என்கவே மக்களை காத்திட
   ஏழாம்படை வீடு ஆக சக்தி
   சன்மார்க்க நெறிபட உருவாக்கி
   சற்குருவாய் அரங்க ஞானி அருள

3. அருளை தாங்கி வருகின்ற
   அரங்கன் சக்தியாம் ஞானத்திருவடி நூலுக்கு
   வரமென சார்வரி மிதுன திங்களுக்கு
   வழங்குவேன் இராமதேவர் யானும்

4. யானும் ஆசிதனை அருளுவேன்
   உயர்வான சன்மார்க்க நெறி
   ஞானமாகத் தாங்கி வருகின்ற
   ஞானத்திருவடி நூலை பெற்று

5. பெற்றுமே வாசித்து வழிநடந்து
   பூஜித்து வரும் மக்கள் வாழ்வில்
   ஆற்றலென குருவருள் துணை
   அனைத்திலும் நிரம்பி நிலை உயரும்

6. உயரும் மக்களிடை திடமும்
   உயர்வும் தெளிவும் கூடுதல் ஆகும்
   தயவை போதித்து தருமமிடுகின்ற
   தவராசன் கொள்கை தவழ்ந்து வர

7. வருகின்ற ஞானத்திருவடி நூல்
   வாழ்க்கைக்கு வழிகாட்டும் நூல்
   தரும பாதை வழி நடந்துமே
   தரணியோர் பின்பற்றி வர

8. வருகவே வையகம் வளமுறும்
வளர்ச்சி நிலை பலதுறையும்
தரும சிந்தை பரவ கிட்டும்
தவராசன் ஆசிதனை உலகோர் பெற

9. உலகோர் பெற மனத்தூய்மை
உண்மை வழி நடக்கும் சக்தி
கலக சிந்தையிலா செயல்பாடும்
காக்கும் தன்மைநிலை பெருகியும்

10. பெருகியே உலக மாற்றம் தனக்கு
பேருதவியாக மக்கள் மாறுவர்
முருகப்பெருமான் சோதி வழிபாடு
முழுமை ஞானமாக ஞானிகள் அருள

11. அருளாக வரும் வழிமுறைகள்தனை
அறம்தனை உலக மக்கள் ஏற்று
அருளமுது உண்டு இனிதே
அரங்கஞானி குடில் தொடர்பை

12. தொடர்பை கூட்டி தொடர்ந்து வர
தொல்லை தரும் கருமவினைகள்
இடரான ருண ரோகம் அல்லல்
எதிரியிடை வஞ்சம் சகலதும் விலகி

13. விலகியே மகிழ்வும் அமைதியும்
விலைமதிப்பில்லா அறிவும் ஞானமும்
பழக்க வழக்கங்களில் தருமமும்
பலரும் மெச்சும் வாழ்க்கை ஏற்றமும்

14. ஏற்றமும் கண்டு உலகமக்கள்
எல்லா வகையும் நிறைவு பெறுவர்
மாற்றம் செய்ய வேண்டி உலகில்
மாதருமம் செய்து வரும் ஞானி

15. ஞானியரின் அருட்கஞ்சி தருமமும்
நல் அன்னதானமும் பேருலகில்
கனிவுபட பரவி நிலைத்திட
கந்தப்பெருமான் துணை உறுதியாகி

16. ஆகியே எங்கும் எதிலுமே
அறமே வடிவாகி களங்கமிலா
மகிழவே தரும சேவையாகி
மாண்புமிக்க மாற்றமாகி எளிதாக

17. எளிதாக யாவர்க்கும் தேவைகள்
இலகுவாக பூர்த்திபடும் படியான
வலிமையான ஆளுமை கூடியே
வடிவேலனாரின் ஞான ஆட்சியாக மாறும்

18. மாறுதலுடன் மக்கள் விரும்புகின்ற
மதிக்கின்ற ஞானிகள் அருளுகின்ற
ஆறுமுகனாரின் ஞானயுகமாக
அருளுவேன் கலியுகம் மாற்றம் பெறும்

19. மாற்றம் தரவல்ல சக்தியாக வரும்
மறைநூலாம் ஞானத்திருவடி நூலை
ஏற்றுவர இறையருள் கிட்டும்
இராமதேவர் என் ஆசி நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

சார்வரி ஆண்டு ஆனி மாதத்திற்கான ஞானத்திருவடி நூலிற்கு மகான் இராமதேவர் அருளிய ஆசி நூலின் சாரம் :

கலியுகத்தை வெல்ல அவதாரமாக வந்துதித்தவரே, அரங்கமகா ஞானி, கல்வி அறிவில்லாத பாமர மக்களுக்கும் இறங்கி அருள் செய்து காக்கின்ற மகா யோகியே அரங்கமகான் ஆவார். மக்களே ஆறுமுக அரங்கா என மனமுருகி கூறிடுங்கள். குருபரன் எம்தந்தை முருகப்பெருமானே இறங்கி அருள் செய்வார் என்பேனப்பா. மக்களை காத்திட ஏழாம்படை வீடாக சக்திமிக்க ஞானவீடாக துறையூர் ஓங்காரக்குடிலை சன்மார்க்க நெறிவழி வரும் அமைப்பாக உருவாக்கி அந்த ஞானபீடத்திலே சற்குருவாய் வல்லமைமிக்க அரங்கமகான் அமர்ந்து அருள் செய்து வர, அரங்கரின் அருளுபதேசங்களை வல்லமையோடு தாங்கி வருகின்ற அரங்கனின் சக்தியான ஞானத்திருவடி நூலுக்கு சார்வரி வருடம் ஆனி மாதத்திற்கான ஆசி நூல்தனையே இராமதேவர் யானும் வழங்கி நிற்பேன் என்கின்றார் மகான் இராமதேவர்.

உயர்வுமிக்க சன்மார்க்க நெறியினை ஞானமாக தாங்கி வருகின்ற ஞானத்திருவடி நூலை பக்தியுடன் பெற்று ஜெபித்து அதை வாசித்து அதில் கூறப்பட்டுள்ள நெறிமுறைகளை ஏற்று அதன் வழி நடந்து ஞானிகளை தினம்தினம் தவறாமல் பூஜித்து வருகின்ற மக்களுக்கு ஆற்றலுடன் குருவருளின் துணை உடன் வரும். அவர்களது எல்லாவிதமான செயல்களிலும் குருவருள் நிரம்பி அவர்களின் நிலை உயரும், மனோதிடம் பெருகிடும், சிந்தையில் தெளிவு உண்டாகும், உயர்வான சிந்தனைகள் உருவாகும்.

தயவு உணர்வினை மக்களுக்கு போதித்து வருகின்ற, அளவிலாத தர்மம் செய்த தர்மஞானி, அரங்கரின் கொள்கை ஞானத்திருவடி நூலிலே தெளிவாக போதிக்கப்படுகின்றதினாலே அரங்கரின் கொள்கையை தாங்கி வருகின்ற ஞானத்திருவடி நூலானது வாழ்க்கைக்கு வழிகாட்டும் நூலாகும். ஆதலினாலே தர்மவழியினில் நடந்து அரங்கரின் கொள்கைகளை பின்பற்றி வர, இந்த உலகம் வளம் பெறும், வளர்ச்சியடையும், பல துறைகளில் முன்னேற்றமடையும்.

ஆறுமுக அரங்கமகா தேசிகரின் ஆசிகளை, உலகோர் தர்மங்களை செய்து தொண்டு செய்து பெற்றிட்டால், அவர்களுக்கு மனத்தூய்மை உண்டாகும். உண்மை வழியில் நடக்கும் துணிவு உண்டாகும். கலகம் உண்டாக்கும் தீய சிந்தனைகளெல்லாம் விலகி தூய செயல்பாடுகள் பெருகி தன்னை நாடி வந்தோரை காக்கின்ற தாயுள்ளம் கொண்ட தன்மை பெருகி நிற்கும். இப்படி மக்களெல்லாம் நன்னெறியில் சென்று பண்புள்ளவர்களாய் மாறி, நடக்கவிருக்கும் உலக பெருமாற்றத்திற்கு பேருதவி புரிவர்.

தூய வழிபாடாகிய, முருகப்பெருமான் மக்களுக்கு அருளிய ஜோதி வழிபாடாகிய, முருகப்பெருமானை ஜோதி வடிவில் சரவணஜோதியாக வழிபடுகின்ற அற்புதமான ஆற்றல்மிக்க சரவணஜோதி வழிபாட்டினை முழுமை ஞானமாக ஞானிகளெல்லாம் உலக மக்களுக்கு அருளியுள்ளார்கள். இந்த வழிபாடு முறைகளை உணர்த்துகின்றதும், அறத்தின் தன்மைகளை உணர்த்துகின்றதுமான அரங்கனின் தூய வழிமுறைகள் தன்னை, அறவழியை உலக மக்களெல்லாம் ஏற்று, குடில் நாடிச் சென்று, அரங்கதரிசனம் பெற்று, அருள் பெற்று, ஆசி பெற்று, தீட்சை உபதேசம் பெற்று, ஆங்கே குடிலினிலே ஞானிகளை பூஜித்து சமைக்கப்படுகின்ற அருளமுதாம் குடில் உணவினை உண்டு, குடில் தர்மப்பணிகளிலே பொருளுதவிகள் செய்தும் தொண்டுகள் செய்தும் குடில் தொடர்பினில் தொடர்ந்து இருந்து வர, உங்களை பற்றிய பிறவிதோறும் தொடர்ந்து வந்து தொல்லை தரும் கர்மவினைகள் எல்லாம் அகலும், துன்பமளிக்கும் கடன் சுமைகள் நீங்கும். உங்களைப் பற்றிய நோய்களும் துன்பங்களும் விலகும். எதிரிகளால் உண்டான துன்பங்களும் வஞ்சங்களும்

விலகி, மகிழ்வான அமைதியான வாழ்வு கூடி அறிவு தெளிவடைந்து ஞானம் பெருகி, நற்பண்புகள் பெருகி, தர்மங்களை ஏராளமாய் செய்து, உலகோர் மெச்சும்படியான முன்னேற்றமான வாழ்வை வாழ்ந்து, எல்லா வகையிலும் நிறைவினை உலகோர் பெறுவார்கள்.

உலகினில் உலகப்பெருமாற்றம் செய்ய வேண்டி, எல்லையிலாது தர்மம் செய்து தர்மபலத்தினை பெருக்கி வருகின்ற மகா ஞானி, ஆறுமுக அரங்கரின் அருட்கஞ்சி தருமமும், அன்னதான சேவையும், இந்த உலகினில் மக்களால் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டு உலகமெங்கும் தர்மங்கள் அன்னதானங்கள் பெருகி பரவி தொடர்ந்து செய்து வர, முருகப்பெருமானின் துணை உலக மக்களுக்கு உறுதியாகி எங்கும் எதிலும் அறமே வடிவமாகி களங்கமற்ற உலகம் உருவாகி, உலகமெங்கும் தர்மசேவை பெருகி, மாண்புமிக்க மாற்றத்தை உலகம் அடைந்து, உலக மக்கள் யாவருக்கும் அவர்களது தேவைகளெல்லாம் எளிமையாக பூர்த்தியாகும்படியான ஆட்சியாளர்களால் உலகம் ஆட்சி செய்யப்பட்டு, அது தர்ம ஆட்சியாக மாறி, தர்மத்தின் தலைவன் முருகப்பெருமான் தலைமையில் ஞான ஆட்சியாக மாறிடுமப்பா.

ஞான ஆட்சியானது மக்கள் விரும்புகின்ற, மக்கள் பக்தியுடன் மதிக்கின்ற ஆட்சியாக, ஞானிகள் அருள் செய்யும் ஆட்சியாக மாறி, முருகப்பெருமானின் ஞானயுகமாக இந்த கலியுகம் மாற்றம் பெறும். எல்லாவித மாற்றங்களையும் தரவல்ல மகா சக்தியாக வருகின்ற வேதநூலாம் ஞானத்திருவடி நூலை இவ்வுலக மக்களெல்லாம் பயபக்தியுடன் பெற்று பூஜித்து படித்து வருவதுடன், பிறர் படிக்க வாங்கிக் கொடுத்தும் செயல்பட்டு வருவதுடன், ஞானத்திருவடி நூல் மூலம் அரங்கன் கூறும் கொள்கைகளை ஏற்று நெறிமுறைகளை ஏற்று கடைப்பிடித்து வந்திட, அவர்களுக்கு கடவுளின் அருள் உறுதியாக கிடைக்கும். அவர்கள் குருவருளையும் திருவருளையும் பெற்று சிறப்புடன் வாழ்வார்கள் எனக் கூறுகிறார் மகான் இராமதேவர்.

–சுபம்–

**எல்லா துன்பங்களையும் வென்று வெற்றி காண விரும்புகின்றவர்கள்**

**“ஓம் சரவணஜோதியே நமோ நம”**

**என்ற மந்திரத்தை காலை மற்றும் மாலையில் சிறிது நேரம் ஜெபித்து வரவும்.**

**– மகான் ஆறுமுக அரங்கமகா தேசிகர்.**

**முருகன் திருவடி வாழ்க**

திருச்சி மாவட்டம், துறையூர், ஓங்காரக்குடிலாசான்,
முருகப்பெருமானின் கல்கி அவதாரம்
தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள்
ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கத்தில்
17.02.1988 அன்று அருளிய அருளுரை

# திருக்குறள் - வாழ்க்கைத் துணைநலம்

ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம

அன்புள்ள சன்மார்க்க சங்க உறுப்பினர்களே, பெரியோர்களே உங்கள் அனைவருக்கும் வணக்கம்.

மகான் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளின் சாரம் நுண்ணியது, மிக நுட்பமானது. மகான் திருவள்ளுவர் விரிந்த பல கருத்துகளை சுருக்கி சொல்லியிருக்கிறார். சுருக்கி சொல்ல வேண்டுமென்றால் விரிந்த பல கருத்துகளை அறிந்திருக்க வேண்டும். குறைந்த கருத்துகளை அறிந்தவன் விரிவாக பேசுவான். விரிந்த கருத்துகளை அறிந்தவன் சுருக்கி பேசுவான்.

மகான் திருவள்ளுவருடைய அறிவு விரிந்தால் அண்டமாக விரியும், ஒடுங்கினால் அணுவாக ஒடுங்கும். ஆகவே விரிந்த பல கருத்துகளை சுருக்கி சொல்லக்கூடிய ஆற்றல் பொருந்தியவர் மகான் திருவள்ளுவர்.

திருக்குறளில் கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் இந்த நான்கு அதிகாரங்களை பாயிரம் என்று சொல்வார்கள். இந்த நான்கு அதிகாரங்களும் காப்புச் செய்யுள்.

திருக்குறளில் உள்ள ஒவ்வொரு அதிகாரத்தையும் பற்றி நமது சங்கத்தில் தொடர்ந்து பேசி வருகிறோம். வாழ்க்கைத் துணைநலம் என்ற அதிகாரத்தைப் பற்றி இப்போது பேச இருக்கிறோம். ஒருவன் எப்படிப்பட்ட பெண்ணை மனைவியாக தேர்ந்தெடுத்தால் அவனுடைய வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கும் என்பதைப் பற்றிய கருத்தை இந்த அதிகாரத்தில் ஆசான் திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார்.

இந்த கருத்துகள் திருமணம் ஆகாதவர்களுக்கு சொல்லப்படுகிறது. ஏனென்றால் ஒருவன் துணையை தேர்ந்தெடுப்பதற்கு முன்பு ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஆனால் துணையை தேர்ந்தெடுத்த பின், அனுசரித்து செல்ல வேண்டும். இல்லையென்றால் வாழ்க்கையில் மகிழ்ச்சி இருக்காது, வாழ்க்கை முற்றுப் பெறாது. அவனுடைய வாழ்க்கையின் இலக்கை அடைய முடியாது.

ஒரு ஆண்மகன் என்னென்ன பண்புகள் உள்ள பெண்ணை தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சொல்லும்போது, பெண்களுக்கும் இது போன்று சொல்ல வேண்டுமல்லவா. மனைவி கணவனை தெய்வமாக நினைக்கலாம், தன்னையே அர்ப்பணிக்கலாம். ஆனால் இவனும் தன் மனைவியை தெய்வமாக நினைக்க வேண்டும், தன்னையே அர்ப்பணிக்க வேண்டும். மனைவி, தன் கணவனிடம் எப்படி தன்னை அர்ப்பணிக்கிறாளோ, அதேபோல் இவன், தன் மனைவியிடம் தன்னை அர்ப்பணிக்க வேண்டும். அந்த பண்பு இருக்குமேயானால், அது வாழ்க்கை துணைநலமாக இருக்கும்.

ஒருபக்கம் ஒரு சாராருக்கு பண்பை சொல்லி, மறுபக்கம் ஒரு சாராருக்கு பண்பை சொல்லாதிருக்க முடியாது. மகான் திருவள்ளுவர் அப்படி சொல்லியிருக்க மாட்டார்.

**ஒருமை மகளிரே போலப் பெருமையும்**
**தன்னைத்தான் கொண்டுஒழுகின் உண்டு.**

**– திருக்குறள் – பெருமை – குறள் எண் 974.**

சுட்டிக் காட்டும்போது, **ஒருமை மகளிரே போல** என்று பெண்ணை சுட்டிக் காட்டுகிறார். கற்புடைய பெண் தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்வது போல், ஆண் மகனும் தன்னைத் தான் காத்துக்கொண்டு ஒழுக்க நெறியில் வழுவாது நிற்க வேண்டுமென்று சொல்கிறார். ஆகவே ஒருவன் தனக்கு துணையாக வரும் பெண்ணை எப்படி தேர்ந்தெடுக்க வேண்டுமென்று சொல்கிறார்.

**மனைத்தக்க மாண்புஉடையள் ஆகித்தற் கொண்டான்**
**வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.**

**– திருக்குறள் – வாழ்க்கைத் துணைநலம் – குறள் எண் 51.**

உனக்கு துணையாக தேடக்கூடிய பெண்ணினுடைய வாழ்க்கையின் தன்மையை ஆராய்ந்து பார்க்க வேண்டும். அந்த பெண்ணின் வீட்டில் எந்த அளவிற்கு பொருளாதாரம் புழங்குகிறது என்பதை பார்க்க வேண்டும். மாதம் எட்டாயிரம் ரூபாய் செலவு செய்கின்ற பெண் இருப்பாளேயானால், அவளை மாதம் ஆயிரம் ரூபாயில் குடும்பம் நடத்தச் சொன்னால் எப்படி இருக்கும் என்று யோசித்துப் பாருங்கள். அவளுக்கு பணம் தண்ணீர் பட்டபாடு, அந்தளவிற்கு செலவு செய்வாள்.

தினமும் ஆயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்யக்கூடிய குடும்பத்தில் இருக்கின்ற ஒரு பெண்ணை வாழ்க்கைத் துணையாக தேர்ந்தெடுத்தால், மாதம் எட்டாயிரம் வருமானம் உள்ள இவனுக்கு எப்படி அவள் பொருத்தமாவாள்.

மாதம் பத்தாயிரம் செலவு செய்யக்கூடிய குடும்பத்தில் இருந்து ஒரு பெண்ணை தேர்ந்தெடுத்தால் எப்படி வாழ்க்கை இனிமையாக இருக்கும்?

அப்படிப்பட்ட குடும்பத்தில் உள்ள பெண் வறுமையை சிறிதும் அறியாதவள், ஆனால் இவனிடம் வறுமை குடிகொண்டுள்ளது. ஆகவே நிச்சயமாக இவனுக்கு அவள் பொருத்தமாக இருக்க மாட்டாள்.

அந்தப் பெண் எவ்வளவுதான் சிறப்பறிவைப் பெற்றிருந்தாலும், கல்வியறிவு உள்ள பெண்ணாக இருந்தாலும் சரி, ஆனாலும் அவளுக்கு தன்னை மாற்றிக் கொள்ளக்கூடிய தகைமை இருக்கிறதா என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். அவளுடைய குடும்பத்தில் வறுமை என்ற பேச்சிற்கே இடமில்லை.

அப்படிப்பட்ட குடும்பத்தில் பிறந்த பெண்ணை திருமணம் செய்தால், இவன் அவளை அனுசரித்து போவதா? அல்லது அவன் இவளை அனுசரித்து போவதா? என்பதை ஆராய்ந்து பார்க்கும்போது, இருவருக்குமே சிறப்பறிவு இருந்தால் இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வார்கள்.

சிறப்பறிவுள்ள மனைவி தன்னுடைய கணவனின் வருவாய்க்கு தகுந்தாற்போல் தன்னை மாற்றிக் கொள்வாள். ஆகவே குடும்பம் நன்றாக இருக்க வேண்டுமெனில், மனைவி தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும். கணவன் தனது மனைவிக்காக வருவாய்க்கு மீறி செலவு செய்தானேயானால், அந்த குடும்பம் கடன் சுமைக்கு ஆளாகும்.

தனக்கு மனைவியாக வருகின்ற பெண் பொருளாதாரத்தை எப்படி செலவு செய்கிறாள்? அவளுடைய தாய் தந்தையருடைய பொருளாதார நிலைமை என்ன என்பதையெல்லாம் கவனித்து, அவள் நம்முடைய தகுதிக்கு ஏற்றவளா என்பதை ஆராய்ந்து பார்த்தபிறகே அவளை திருமணம் செய்து கொள்ள வேண்டும்.

**மனைத்தக்க மாண்புஉடையள் ஆகித்தற் கொண்டான்**
**வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.**

**– திருக்குறள் – வாழ்க்கைத் துணைநலம் – குறள் எண் 51.**

**மனைத்தக்க –** குடும்பத்திற்கு ஏற்றவளாக இருக்கிறாளா, குடும்பத்தை சார்ந்து செயல்படுவாளா அல்லது புறக்கணிப்பாளா என்பதை ஆராய்ந்து பார்த்து திருமணம் செய்து கொள்ள வேண்டும்.

ஒரு ஊரில் ஐந்தாயிரம் குடும்பம் இருக்கிறதென்றால், ஐந்தாயிரம் வகையான குணம் இருக்கும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் குணப்பண்புகள் மாறும். தன்னுடைய கணவனின் குடும்பத்திற்கேற்றவாறு தன்னை மாற்றிக் கொள்கின்ற பண்பு அவளிடம் இருக்கிறதா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். இல்லையென்றால் அவளுக்கு எந்த வகையில் அந்த பண்பை போதிக்க முடியும் என்பதை ஆராய்ந்து பார்த்து, பண்பை போதித்து அவளை நம் குடும்பத்திற்கேற்றவாறு மாற்ற வேண்டும்.

ஆறு மாதங்கள் அவளுடைய போக்கை அறிந்து, பிறகு தன்வயப்படுத்த முயற்சிக்க வேண்டும். இப்படி செய்ய முடியாது என்று நினைக்க வேண்டாம், கண்டிப்பாக முடியும். ஏனென்றால் அவளும் மனித வர்க்கம்தானே.

**மனைத்தக்க மாண்பு –** நற்செய்கை, நற்குணம், நற்பண்பு.

நற்குணம் என்பது சான்றோரை போற்றுதல், விருந்தை உபசரித்தல், ஏழை எளியோருக்கு உதவி செய்தல், பிறருக்கு கொடுத்து உதவுதல், தன் கணவரின் தாய் தந்தையரை பேணுதல், கணவனை அனுசரித்து நடத்தல் போன்றவையாகும்.

இப்படிப்பட்ட குணப்பண்புகள் இருக்கிறதா என்பதை ஆராய்ந்து பார்த்து, ஒரு பெண்ணை திருமணம் செய்ய முடியாது. ஏனென்றால் தாரமும் தந்தையும் தன் வினைப்பயன் என்று சொல்வார்கள்.

எந்தெந்த காலத்திலே தன் குடும்பத்திற்கு தேவையான தானியங்கள், மளிகைப் பொருட்கள் கிடைக்கிறதோ, அந்தந்த காலத்தில் அந்தப் பொருட்களை வாங்கி சேகரித்து பக்குவப்படுத்தி பாதுகாத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

அதுமட்டுமல்ல தன்னுடைய கணவனுக்கு ஏற்ற ஆரோக்கியமான உணவை சமைத்து கொடுக்க வேண்டும். தன் கணவனின் தேக ஆரோக்கியத்திற்கு பாதிப்பை உண்டாக்கக் கூடிய உணவை, மனைவி புறக்கணிக்க வேண்டும். அது சிறந்த பண்பாகும்.

குடும்ப உறுப்பினர்களுக்கு தகுந்தாற்போல் அளவாக உணவை சமைத்து, கணவனின் பொருளாதாரத்தை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும். உணவை மிகுதியாக சமைத்து அதை வீணாக்க கூடாது. இப்படிப்பட்டவள்தான் மனைத்தக்க மாண்புடையவள்.

குடும்ப உறுப்பினர்க்கு ஏற்றாற்போல் தேவையான அளவிற்கும் சுவையாகவும் உணவை சமைக்க வேண்டும். அந்த உணவை வீணாக்காமல் பயன்படுத்த வேண்டும். அப்படி சமைக்கக் கூடிய பெண்தான் மனைத்தக்க மாண்புடையவள் ஆவாள்.

சுயநலமாக தனக்கு பிடித்த உணவை மட்டும் சமைக்கிறாள் என்றால், அவள் மனைத்தக்க மாண்புடையவள் அல்ல.

தனது குடும்பத்திற்கு ஒரு வருடத்திற்கு தேவையான அளவிற்கு மளிகைப் பொருட்களை சேமித்து வைத்துக் கொள்ள வேண்டும். அந்தப் பொருட்களை பாதுகாத்து வைத்துக் கொள்ள வேண்டும். பொருட்களை வீண் செய்யாதிருக்க வேண்டும். இப்படியெல்லாம் இருக்கின்ற ஒரு பெண் அமைந்தால், அவள்தான் வாழ்க்கைக்கு சிறந்த துணை என்று சொல்வார்கள்.

கணவனின் வருவாய்க்கேற்றார்போல் செலவினங்களை சுருக்கி, சிக்கனமாக செலவு செய்யக் கூடிய பெண்தான், சிறந்த வாழ்க்கைத் துணை என்று சொல்வார்கள். இது மகான் திருவள்ளுவருடைய வாழ்க்கைத் துணைநலம் ஆகும். இப்படியெல்லாம் இருந்தால் நன்றாக இருக்கும் என்று சொல்வார்.

**மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை**
**எனைமாட்சித்து ஆயினும் இல்.**

**– திருக்குறள் – வாழ்க்கைத் துணைநலம் – குறள் எண் 52.**

**மனைமாட்சி இல்லாள் –** மனை என்றால் இல்லறம். அதற்குரிய மாட்சி என்பது விருந்தை உபசரித்தல், பண்பு காட்டுதல், அனுசரித்து செல்லுதல், விட்டுக் கொடுத்தல் போன்ற பண்புகளெல்லாம் அவளிடம் இல்லையென்றால் எவ்வளவு சிறப்பு பொருந்தியதாயினும் அதனால் யாதொன்றும் பயனில்லை என்கிறார்.

**வாழ்க்கை எனைமாட்சித்து ஆயினும் இல் –** பண்புகள் இல்லையென்றால் எவ்வளவு சிறப்புகள் இருந்தாலும், அதனால் பயன் ஒன்றுமில்லை என்கிறார். இதெல்லாம் அவரவர்களுடைய வினைப்பயனுக்கு ஏற்றாற்போல அமையும். அவனுடைய வினைத்தன்மையின் அளவிற்கு தகுந்தாற்போல் அவனுக்கு தாரம் அமைவாள்.

**இல்லதென் இல்லவள் மாண்பானால்; உள்ளதென்**
**இல்லவள் மாணாக் கடை.**

**– திருக்குறள் – வாழ்க்கைத் துணைநலம் – குறள் எண் 53.**

ஆசான் திருவள்ளுவர் மிகப்பெரிய யோகி என்பதை, தனவான் ஒருவர் அறிந்திருந்தார். அந்த தனவான் ஆசான் திருவள்ளுவரிடம், தனது வீட்டிற்கு விருந்திற்கு வரவேண்டும் என்று அவருடைய காலில் விழுந்து கெஞ்சினார். பலமுறை இப்படி கேட்ட பிறகு ஆசான் திருவள்ளுவரும் விருந்திற்கு வருகிறேன் என்று சம்மதம் தெரிவித்தார்.

விஷ்ணு பகவான் இந்த உலகத்தை மூன்று அடியால் அளந்தார். ஆனால் ஆசான் திருவள்ளுவர் ஒன்றே முக்கால் அடியில் உலகத்தை அளந்தவர். அப்பேர்ப்பட்ட மாமேதை மனமிரங்கி தனவான் வீட்டிற்கு விருந்திற்கு செல்கிறார். தன்னை விருந்து உபசரிக்க அழைத்தவனிடம் அன்பு காட்டுவதற்காக மனமிரங்கி செல்கிறார்.

அந்த பெரும் தனவந்தன் ஆசானை அழைத்து செல்கிறார். தனவந்தன் வீட்டின் உள்ளே கட்டிலில் அவனது மனைவி அமர்ந்திருக்கிறாள். ஆசான் திருவள்ளுவர் எளிமையான தோற்றத்தில் இருந்தார். பெரும் தனவந்தனின் மனைவி தனது வீட்டிற்கு வந்த ஆசான் திருவள்ளுவரை கட்டிலில் அமர்ந்து கொண்டே அப்படியே பார்த்தாள். அவள் சிறிதும் ஆசான் திருவள்ளுவரை லட்சியம் செய்யவில்லை.

ஆசான் திருவள்ளுவரை தனவந்தன் வீட்டின் உள்ளே அழைத்துச் சென்றான். அங்கே அமர்ந்திருந்த தனது மனைவியை பார்த்து எழுந்திரு என்றான். அவள் கட்டிலைவிட்டு எழுந்து பாராமுகமாக சென்றாள். இதையெல்லாம் ஆசான் திருவள்ளுவர் அப்படியே பார்க்கிறார்.

தனவந்தன் விருந்து உபசரிக்க தன்னை வருந்தி அழைக்கிறான். ஆனால் அவன் மனைவியோ வீட்டிற்கு வந்த ஆசான் திருவள்ளுவரை வாருங்கள் என்று அழைக்கவில்லை. அந்தக் குறிப்பை உணர்ந்து ஆசான் திருவள்ளுவர் ஒன்றும் பேசவில்லை. ஆசான் திருவள்ளுவர் மௌனமாக சிரித்தார்.

தனவந்தன் வாருங்கள் ஐயா என்று மாடிக்கு செல்லலாம் என்று அழைத்து சென்றான். இந்த பகுதியில் உள்ள அத்தனை நிலமும் என்னுடையது என்றான். மிக்க மகிழ்ச்சி என்றார். அங்கே உள்ள நெற்களஞ்சியத்தை சுட்டிக்காட்டி எண்ணூறு கலம் நெல் இதிலிருக்கிறது என்கிறான். மிக்க மகிழ்ச்சி என்கிறார். இப்படி ஒவ்வொன்றாக அவனிடம் உள்ளவற்றை சுட்டிக்காட்டி சொல்லிக் கொண்டே இருந்தான்.

ஆசான் திருவள்ளுவர் இத்தனை சொத்துகள், சிறப்புகள் உனக்கு இருந்தும், உனக்கென்று ஒன்றும் இல்லை என்று சொன்னார். ஆயிரக்கணக்கான காணி நிலம், அள்ள அள்ள குறையாத செல்வம், நிறைய நெல் மூட்டை, பால்பாக்கியம் இத்தனையும் இருந்தும் உனக்கென்று ஒன்றும் இல்லை என்றார் ஆசான் திருவள்ளுவர். சரி வாருங்கள் சாப்பிடுவோம் என்று ஆசான் திருவள்ளுவரை அழைத்தான் தனவந்தன். ஆசான் திருவள்ளுவரோ சாப்பிட மறுத்துவிட்டார்.

பக்கத்து தெருவில் உன்னை விட உயர்ந்தவன், எல்லா செல்வமும் உள்ள ஒருவன் இருக்கிறான். அவனது வீட்டிற்கு சாப்பிட போவோம் என்கிறார் ஆசான் திருவள்ளுவர். ஆனால் அந்த தனவந்தனோ, என்னைவிட உயர்ந்த செல்வம் படைத்தவன் இந்த ஊரில் யாரும் இல்லை என்றான். சரி அவனை பார்ப்போம் என்று அந்த தனவந்தன் ஆசான் திருவள்ளுவருடன் பக்கத்து தெருவிற்கு சென்றான்.

பக்கத்து தெருவில் இருந்த ஒரு குடிசையில் நுழைந்தார்கள். அந்த சாதாரண குடிசையில் இருப்பவனுக்கு ஆசான் திருவள்ளுவரைப் பற்றி நன்கு தெரியும். அவன் வாருங்கள் என்று அன்போடு அழைத்து ஆசான் திருவள்ளுவர் காலில் அவனும் அவனது மனைவியும் விழுந்து மனமகிழ்ந்து வணங்கினார்கள். அந்த குடிசையில் இருந்த அவனுடைய மனைவி அவர்களை அமர வைத்துவிட்டு உள்ளே சென்று தன்னிடம் இருந்த நீராகார தண்ணீரில் உப்பு போட்டு கொண்டு வந்து மிகுந்த அன்போடு இருவருக்கும் கொடுத்தாள். ஆசான் திருவள்ளுவரும், தனவந்தனும் அந்த நீராகார தண்ணீரை வாங்கி குடித்தார்கள்.

அவன் இடுப்பில் துண்டை கட்டிக் கொண்டு பயபக்தியுடன் கைகட்டி நிற்கிறான். அவனது மனைவியும் பணிந்து நிற்கிறாள். இவனுடைய குடும்பம்தான் கோடீஸ்வர குடும்பம், பல லட்சத்திற்கு அதிபதி இவர்கள்தான் என்று ஆசான் திருவள்ளுவர் சொன்னார். ஆனால் தனவந்தனுக்கு அத்தனை செல்வங்கள் இருந்த போதிலும், அவனுடைய மனைவி கணவனை மதிக்காதவள். கட்டிய கணவனை மதிக்காதவள், எப்படி ஞானிகளை மதிப்பாள்?

**இல்லதென் இல்லவள் மாண்பானால்** – தனவந்தனிடம் எல்லா செல்வங்களும் இருக்கிறது. ஆனால் இந்த குடிசையில் இருப்பவனிடம் அடுத்த நேரத்திற்கு உணவில்லை. பழைய கஞ்சிதான் அவனிடம் இருக்கிறது. அவனுடைய மனைவியிடம் கணவனை மதிக்கும் பண்பு இருப்பதால், அவன் கோடீஸ்வரன்.

ஆனால் அந்த தனவான் பெரும் வசதியுள்ளவன், கோடீஸ்வரன். அந்த தனவானின் மனைவி கணவனிடம் அன்பு காட்டாதவள், பிறரை மதிக்க மாட்டாள். ஆனால் இவ்வளவு வசதி அவனிடம் இருந்தும், அவனை அனுசரித்துப் பேசாத அவனது மனைவியால் இவன் ஏழையே.

மனைவி கணவன் மீது அன்பு செலுத்தவில்லையென்றால், பிறரை மதிக்கவில்லையென்றால் கோடிக்கணக்கான செல்வம் இருந்தும் அதனால் யாதொன்றும் பயனில்லை. பொல்லாத வறுமை இருந்தபோதும் பண்புள்ள மனைவி அமைந்துவிட்டால் அவன் கோடீஸ்வரன். பல கோடி மூலதனம் இருந்தபோதிலும், பண்பில்லாத மனைவி ஒருவனுக்கு அமையுமேயானால் அவன் வறுமையுள்ளவன்.

**இல்லதென் இல்லவள் மாண்பானால்; உள்ளதென்**
**இல்லவள் மாணாக் கடை.**

**– திருக்குறள் – வாழ்க்கைத் துணைநலம் – குறள் எண் 53.**

பண்பில்லாத மனைவி அமைந்தவர்களெல்லாம் இறையை நொந்து கொள்ள வேண்டுமே அன்றி யாரையும் நொந்து கொள்ளக் கூடாது. நமது வினைப்பயன் என்று ஆறுதல் அடைய வேண்டுமே தவிர, அதற்காக பழிவாங்கும் செயலை மேற்கொள்ளக் கூடாது. அப்படி பழிவாங்கும் முயற்சியை மேற்கொண்டால், நிச்சயமாக அடுத்த ஜென்மத்திலே இதைவிட கீழான நிலைக்குப் போவான்.

ஏனென்றால் தாரமும் தந்தையும் தன் விதி. இவன் செய்த வினைக்கேற்றார்போல்தான் மனைவி அமைவாள். அப்படி நினைத்து தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும். அப்படி மாற்றிக் கொள்ளாமல், முரண்பட்டால் இவன் பாவியாகிவிடுவான்.

முரண்பட்ட மனைவியை தன்னுடன் உடன்பாடாக மாற்ற வேண்டுமெனில், அவளிடம் அன்பு செலுத்த வேண்டும். அதை விட்டுவிட்டு முரண்பாடாக நடந்தால், மேலும் பாவச்சுமை அதிகமாகிவிடும். முன் செய்த தீயவினையால்தான் குணப்பண்பில்லாத மனைவி அமைவாள். இதற்கு பரிகாரம் அன்பு ஒன்றுதான்.

**பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்**
**திண்மைஉண் டாகப் பெறின்?**

**– திருக்குறள் – வாழ்க்கைத் துணைநலம் – குறள் எண் 54.**

ஒருவனுக்கு பெற்ற செல்வத்திலே பெரிய செல்வம் எது?

**திண்மை –** உறுதி.

களங்கமில்லாத பெண், கற்பு தவறாத பெண், உறுதி தளராத பெண் மனைவியாக அமைந்தால் அதைவிட பெரிய செல்வம் இவ்வுலகில் இல்லை. ஒருவன் அடையக்கூடிய செல்வத்திலே உயர்ந்த செல்வம் இது.

என்ன துன்பம் வந்தாலும், என்ன இடர்பாடான சூழ்நிலை வந்தாலும் தன் நிலை மாறுபடாத ஒரு பெண் மனைவியாக அமைந்தால், அவளுடைய கணவன் பெற்ற செல்வத்திலேயே சிறந்த செல்வம் இதுதான் என்பார்.

**பெண்ணின் பெருந்தக்க யாவுள –** கற்பு என்று சொல்லப்பட்ட உறுதி இருக்குமேயானால், அந்த பெண்ணின் பிறப்பைவிட உயர்ந்த பிறப்பு இருக்க முடியாது.

**தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்**
**பெய்எனப் பெய்யும் மழை.**

**– திருக்குறள் – வாழ்க்கைத் துணைநலம் – குறள் எண் 55.**

கணவனும் மனைவியும் மனம் ஒன்றிய வாழ்க்கையை நடத்துகிறார்கள். கனவு காணும் போதெல்லாம் கணவனின் தோற்றமே வருகிறது. தூங்கி எழும்போதே கணவன் பாதத்தை தொட்டு வணங்குவாள். அவர்கள் இருவருடைய மனமும் ஒன்றுபட்டுவிட்டது. கணவன் கனவு காணும் போதெல்லாம் மனைவியின் தோற்றமே வருகிறது. மனைவியின் முகத்தை பார்த்துவிட்டுதான் வேலைக்கு செல்வான். இப்படி மனம் ஒன்றிய அன்போடு இருவரும் வாழ்கிறார்கள்.

முன் ஜென்மத்திலே செய்த நல்வினையின் காரணமாக இருவருடைய கருத்தும் ஒன்றாக இருக்கிறது. ஆதலால் அன்பு பொருந்தி வாழ்கிறார்கள்.

**ஈதல் அறந் தீவினைவிட்டு ஈட்டல் பொருள் – எஞ்ஞான்றுங்**
**காதல் இருவர் கருத் தொருமித்து – ஆதரவு**
**பட்டதே இன்பம் பரனைநினைந் திம்மூன்றும்**
**விட்டதே பேரின்ப வீடு.**

**– மகான் ஔவையார் – தனிப்பாடல் களஞ்சியம் – கவி எண் 1146.**

மகான் ஔவையார் மேற்கண்ட பாடலில் **காதல் இருவர் கருத்து ஒருமித்து – ஆதரவு பட்டதே இன்பம்** என்று சொல்கிறார். கணவன் மனைவி இருவருமே ஒருவரை ஒருவர் புரிந்து செயல்படுகிறார்கள். அதனால் இயற்கை கனியும்.

ஒருவரை ஒருவர் வஞ்சித்தல், முரண்படுதல், துன்புறுத்தல் போன்றவற்றால் பாவம் சூழ்ந்துவிடும். மனம் ஒன்றுபட்ட கணவன் மனைவி, ஒருவரை ஒருவர் துன்புறுத்திக் கொள்ள மாட்டார்கள், மனம் வேதனைப்படும்படி பேச மாட்டார்கள், செயல்பட மாட்டார்கள். ஆகவே இருவரும் இயற்கையை சார்ந்தவர்கள், இயற்கைக்கு விரோதமானவர்கள் அல்ல.

